**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பம் - 2022**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 ஒக்தோபர் 07 ஆம் திகதிய எல்4121-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் ஜீ9222-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தற்போதைய மூன்றாவது அலையான கொவிட் - 19 தொற்றுநோய் முகாமைத்துவம் காரணமாக மூல செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையை அமுல்ப்படுத்தி, மேலும் அதிகரித்து வரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு மேற்படி மீள்ஒதுக்கீடு காரணமாக ஏற்பட்ட நிதி பற்றாக்குறையை எதிர்கொள்ளுதல், கொத்தணி உச்ச மருத்துவமனைகளாக உருவாக்கப்படும் ஆரம்ப ஒன்பது செயற்திட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு இரண்டாம் நிலை சிகிச்சை வசதியை (கொவிட்-19 விடய முகாமைத்துவத்திற்கானது உட்பட) உருவாக்குவதற்கு ஆதரவளித்தல், நாட்டில் அதிகரித்து வரும் கொவிட்-19 நிலைமையைக் கருத்தில் கொண்டு தொலைதூர மற்றும் மின்-கற்றலுக்கான வசதிகளை விரிவுபடுத்துதல், அளவிடப்பட்ட செயற்திட்டங்களின் விளைவுகளை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தி அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட இறுதித் திகதியை 24 மாதங்களால் அல்லது 2025 நவம்பர் வரை நீடித்தல் மற்றும் கொவிட்-19 தொடர்பான நிதி இடைவெளிகளை எதிர்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 3 மில்லியன் மானியத்தை வழங்குவதற்காக ஜப்பான் நிதிய வறுமைக் குறைப்பை அணுகுதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,538.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 22,543.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 113 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 1,995.0 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| தாமத தண்டப்பணம் (LD கட்டணங்கள்) குறிப்பொன்றில் வெளிப்படுத்தப்படாமல், தலைகீழான (Reverse) பதிவுகள் மூலம் செலவினங்களுக்கு மீண்டும் செலவு வைக்கப்பட்டது. | 14.5 | 2022 ஆம் ஆண்டில் இந்த கழிப்பனவுகளின் மீள்கொடுப்பனவிற்காக எந்தப் பொறுப்பும் காணப்படாததால் அந்தத் தொகைகள் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் உரிய செலவினக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டு, உருப்படிகளிற்காக ஏற்பட்ட உண்மையான கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன. | கணக்கில் குறிப்பு மூலம் இதனை வெளிப்படுத்த வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாண இல. 753(1) மற்றும் 753(2) | வழங்கும் உத்தியோகத்தர் பொதுப் படிவம் 141 இல் வழங்கல் கட்டளையைத் தயாரிக்க வேண்டியதுடன் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர் பொதுப் படிவம் 219 இல் பெறுதல் கட்டளையை தயாரிக்க வேண்டும். எனினும் சம்பந்தப்பட்ட எத்தியோகத்தர்கள் ரூபா 2,597 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்காக இந்த விதியைப் பயன்படுத்தியிருக்கவில்லை. | உயிர்மருத்துவ பொறியியல் பிரிவால் பொருட்கள் பெறப்பட்டதுடன் பொருட்கள் பெறப்பட்ட குறிப்புக்கள் முறையாக வழங்கப்பட்டதுடன் உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவால் பொருளிருப்பு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டன. உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவால் பெறப்பட்ட கொவிட் பராமரிப்பு தொடர்பான உபகரணங்கள் மற்றும் வழங்கல்கள் தேவைக்கேற்ப அவர்களால் செய்யப்படுகின்றன, மேலும் பொருட்களின் வழங்கல்கள் மீது நாங்கள் எந்தக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் குழுக் கூட்டம் இரண்டு முறை மாத்திரமே நடாத்தப்பட்டது. | நாங்கள் 2022 ஆம் ஆண்டிற்காக இரண்டு வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடாத்தினோம். அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக, ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிலும் எங்களால் வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்**

**(அ)**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள் | | |
| | 42 முதன்மை மருத்துவ சேவை அலகுகள் மற்றும் மாவட்ட சுகாதார சேவை அலகுகளின் பௌதீக உடகட்டமைப்பு அபிவிருத்தி. | 42 | (i) மதிப்பீட்டுப் படிமுறையின் கீழ் 32 அலகுகள்.<br>(ii) 10 பிரிவுகளின் நோக்கெல்லை மாற்றப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்தில் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் காணப்படவில்லை. | பொருளாதார நெருக்கடி மற்றும் கிடைக்கும் நிதி போதுமானதாக காணப்படவில்லை |

**முகாமைத்துவத்தின் பதில்** 2022 ஆம் ஆண்டில், பொருளாதார நெருக்கடியால் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்தன, மேலும் நாற்பத்தியிரண்டு வசதிகளின் அபிவிருத்திக்கு கிடைக்கக்கூடிய நிதிகள் போதுமானதாக இருக்கவில்லை, மேலும் செயற்திட்டம் கிரயத்தை குறைப்பதற்கு ஒன்பது உப செயற்திட்டங்களில் நோக்கெல்லை மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. நோக்கெல்லை மாற்ற செயன்முறைக்குப் பின்னர் சில உப செயற்திட்டங்கள் கேள்வி செயன்முறையில் உள்ளன, மேலும் சில உப செயற்திட்டங்கள் போதுமான நிதி கிடைக்காததால் நிறுத்தப்பட வேண்டியிருந்தன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் உரிய காலத்தில் நடாத்தப்பட வேண்டியதுடன் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(ஆ)**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள் | | |
| | ஆரம்ப மருத்துவ சேவை அலகுகள் மற்றும் மாவட்ட சுகாதார சேவை அலகுகளின் 10 அலகுகள் | 10 அலகுகள் | இல்லை | பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்களின் கோரிக்கையின் அடிப்படையில், விலை உயர்வு ஏற்பாடுகள் |

**முகாமைத்துவத்தின் பதில்** ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் குறுகிய கால ஒப்பந்தங்களுக்கு விலை உயர்வு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச் செயன்முறை கால அவகாசத்தை எடுத்திருந்ததுடன் ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதங்களை விளைவித்திருந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டத்தை உரிய காலத்தில் நடாத்தி விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 ICU வென்டிலேட்டர்கள் (ventilators) 2021 திசெம்பர் 27 இல் ரூபா 90 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது, மேலும் அவற்றில் ரூபா 25 மில்லியன் தொகையான ஏழு தற்காலிக பயன்பாட்டிற்காக சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது, எனினும் அந்த இயந்திரங்கள் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ஒரு வருடம் மற்றும் 9 மாதங்களாக இருந்தன. இனங்காணப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப உரிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டிருக்க வேண்டும். | வைத்தியசாலைகளின் தேவைப்பாடுகளுக்கேற்ப பொருட்களை விநியோகிக்கும் பொறுப்பு உயிர்மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவினரிடம் உள்ளதுடன் செயற்திட்டம் மருத்துவ பொருட்கள் மீது எந்த கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டத்தின் மூலம் வைத்தியசாலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டு தற்காலிக பாவனைக்காக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட இயந்திரங்கள், அதனுடன் தொடர்புடைய இயந்திரங்கள் உடனடியாக மீளப் பெறப்பட்டு அந்த இயந்திரங்களை தேவையான வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குத் தேவையான பணிகளை செயற்திட்டம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொடுப்பனவு அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 25 ICU வென்டிலேட்டர்களில், உரிய இயந்திரங்களை வழங்கி நிறுவியதன் பின்னர் 05 இயந்திரங்கள் தேசிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டதுடன் உயிர்மருத்துவ பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒரு இயந்திரம் 2023 மே 08 அளவில் நிறுவப்பட்டிருந்தது. எனினும், ரூபா 4.3 மில்லியன் பெறுமதியான வங்கி உத்தரவாதம் 2022 மார்ச் 15 இல் பெறப்பட்டது, மேலும் இந்த கொடுக்கல்வாங்கல் தொடர்பான இறுதிக் கொடுப்பனவு ரூபா 18 மில்லியனாக இருந்ததுடன் இது 2022 மார்ச் 24 இல் செலுத்தப்பட்டது. இந்த வங்கி உத்தரவாதத்தின் காலம் 2023 ஏப்ரல் 23 இல் முடிவடைந்ததுடன் அதன் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படாததால், அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | உயிர்மருத்துவ பொறியியல் சேவை பணிப்பாளரின் எழுத்துமூல பரிந்துரையின் பேரில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது, அதன் அடிப்படையில் இயந்திரங்களுக்கான தளங்கள் தயாரானதும் நிறுவப்படும். | சரியான திட்டமிடலை மேற்கொண்டு நட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |